# நடைபாதைகளில்

## வாகனங்கள் நிறுத்துவதா? 33 பேருக்கு அபராதம் விதிப்பு



கோலாலம்பூர், ஜூலை 26-

பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் நடைபாதைகளில் வாகனங்களை நிறுத்தி வைத்திருந்த 33 வாகனமோட்டிகளுக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

மேலும் நடைபாதைகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 10 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் நான்கு கார்களும் இழுத்துச் செல்லப்பட்டன.

பொது மக்கள் கொடுத்த புகார்களை அடுத்து நேற்று முன்தினம் பிரிக்பீல்ட்ஸ் வட்டாரத்தில் கோலாலம்பூர் மாநகராட்சி மன்றத்தின் அமலாக்கப் பிரிவு அதிகாரிகள் சோதனை நடத்தினர்.

குறிப்பாக ஜாலான் சென்ட்ரல் 3 மற்றும் அதன் சுற்றுப் பகுதியில் இந்த சோதனைகள் நடத்தப்பட்ட. நடைபாதைகளில் ஏராளமான மோட்டார் சைக்கிள்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

முதியவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த நடைபாதைகளில் இப்படி சட்டவிரோதமாக மோட்டார் சைக்கிள்கள் நிறுத்தி வைக்கப்படுவது குறித்து புகார்கள் கிடைத்தன என்று ஓர் அதிகாரி கூறினார்.

நேற்று முன்தினம் அங்கிருந்து 10 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் 4 கார்கள் இழுத்து செல்லப்பட்டன. மேலும் பல்வேறு குற்றங்களுக்காக 33 வாகனமோட்டிகளுக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

இப்படி கண்ட கண்ட இடங்களில் வாகனங்களை நிறுத்துவது பொது மக்களுக்கு சிரமத்தை ஏற்படுத்துகிறது. மேலும் பாதசாரிகளின் பாதுகாப்புக்கு மிரட்டலாக இருக்கிறது.

எனவே வாகனங்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் பகுதிகளில் மட்டுமே வாகனங்களை நிறுத்த வேண்டும். தவறினால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் எச்சரித்தார்.